டிஜிட்டல் டெய்லி
Kaalaimani.com
# காலைமணி.காம்
17.9.2023 ஞாயிற்றுக்கிழமை • மதுரை • பக்கங்கள் 23 • Online Edition • www.kaalaimani.com

# செப்.23ல் ஒரே நாடு ஒரே தேர்தல் குறித்து ஆலோசனைக் குழுவின் முதல் கூட்டம்

## முன்னாள் குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் தகவல்

புது தில்லி, செப்.16

ஒரே நாடு ஒரே தேர்தல் தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள குழுவின் முதல் ஆலோசனைக் கூட்டம் வரும் 23-ம் தேதி நடைபெறும் என்று அந்தக் குழுவின் தலைவரும், முன்னாள் குடியரசுத் தலைவருமான ராம்நாத் கோவிந்த் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இது குறித்து விரிவான செய்தியாவது:

நாடாளுமன்றத் தேர்தல், சட்டமன்றத் தேர்தல், உள்ளாட்சித் தேர்தல் ஆகியவற்றை ஒன்றாக நடத்துவது குறித்து ஆய்வு செய்வதற்காக முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் மத்திய அரசு கடந்த 2-ம் தேதி ஒரு குழுவை அமைத்தது. மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, காங்கிரஸ் கட்சியின் மக்களவைத் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி, மாநிலங்களவை முன்னாள் தலைவர் குலாம் நபி ஆசாத், 15-வது நிதி ஆணையத்தின் முன்னாள் தலைவர் என்.கே. சிங், மக்களவை முன்னாள் பொதுச் செயலாளர் சுபாஷ் காஷ்யப், மூத்த வழக்கறிஞர் ஹரிஷ் சால்வே, முன்னாள் ஊழல் கண்காணிப்பு ஆணையர் சஞ்சய் கோத்தாரி ஆகியோர் குழுவின் உறுப்பினர்களாக அறிவிக்கப்பட்டனர். கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் பங்கேற்பார் என்றும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.




### விடுமுறை அறிவிப்பு

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு 18.9.2023 திங்கள்கிழமை காலைமணி.காம் அலுவலகத்துக்கு விடுமுறை. எனவே எமது அடுத்த மின்னிதழ் 20.9.2023 புதன்கிழமை வெளிவரும்.

-நிர்வாகி

மத்திய அரசின் இந்த அறிவிப்புக்கு எதிர்க்கட்சிகள் தரப்பில் கடும் விமர்சனமும் எதிர்ப்பும் ஏற்பட்டது. முன்னாள் குடியரசுத் தலைவர் தலைமையில் குழு அமைத்தது மரபு மீறிய தவறான செயல் என காங்கிரஸ் விமர்சித்தது. முன்னாள் குடியரசு தலைவர் ஒருவரை ஒரு கமிட்டியின் தலைவராக அரசு நியமிப்பதை இப்போதுதான் நான் முதன்முறையாகப் பார்க்கிறேன். ஒரே நாடு ஒரே தேர்தல் குறித்து ஆய்வு செய்வதற்கான குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி அல்லது ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவரை நியமித்திருக்கலாம்.

புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தை குடியரசுத் தலைவரைக் கொண்டு திறக்காமல், பிரதமரைக் கொண்டு திறந்ததன் மூலம், குடியரசுத் தலைவர் பதவிக்கு இருக்கும் கண்ணியத்தை முடிவுக்குக் கொண்டு வந்தனர். தற்போது முன்னாள் குடியரசுத் தலைவர் ஒருவரை ஒரு குழுவின் தலைவராக நியமித்து மரபை மீறியுள்ளனர். இதன் மூலம் தவறான பாரம்பரியத்தை உருவாக்கி இருக்கிறார்கள் என காங்கிரஸ் மூத்த தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பிரமோத் திவாரி விமர்சித்திருந்தார். திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டத்தைக் கடுமையாக எதிர்த்து வருகின்றன. இந்நிலையில், ஒரே நாடு ஒரே தேர்தல் குறித்த ஆய்வுக் குழுவின் முதல் ஆலோசனைக் கூட்டம் வரும் 23-ம் தேதி நடைபெறும் என்று முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தெரிவித்துள்ளார்.

## செப்.30ல் ரூ.2000 நோட்டை மாற்றுவதற்கான காலக்கெடு நிறைவு

புது தில்லி, செப்.16

2,000 ரூபாய் நோட்டுகளை திரும்பப் பெறுவதற்கான காலக் கெடு செப்டம்பர் 30ஆம் தேதியுடன் நிறைவடைகிறது. 2000 ரூபாய் நோட்டுகளின் புழக்கத்தை நிறுத்துவதாக கடந்த மே மாதம் 19ஆம் தேதி ஆர்பிஐ அறிவித்த நிலையில், அதனை வங்கிகளில் கொடுத்து மாற்றிக்கொள்ளலாம் என தெரிவித்தது. இதற்க காலக்கெடுவும் நிர்ணயிக்கப்பட்டது. பொதுமக்கள் தங்கள் கையில் இருக்கும் 2 ஆயிரம் ரூபாய் நோட்டுகளை செப்டம்பர் மாதம் 30ம் தேதிக்குள் மாற்றிக் கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டிருந்தது. மக்கள் தங்கள் கையில் 2000 ரூபாய் நோட்டுகள் இருந்தால் அதனை செப்டம்பர் 30ஆம் தேதிக்குள் மாற்றிக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படு கிறது. ஏற்கனவே, 97 சத நோட்டுகள் திரும்பப் பெறப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்ட நிலையில், கால அவகாசத்தை நீட்டிக்கும் வாய்ப்பு குறைவாகவே இருக்கும் என கருதப்படுகிறது.

kaalaimani.com in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Phone: 4366425.

# ஆதார், ஓட்டுநர் உரிமம் பெற அக்.1 முதல் பிறப்பு சான்றிதழ் முக்கிய ஆவணமாகிறது

புது தில்லி, செப்.16

பிறப்பு மற்றும் இறப்பு (திருத்தம்) சட்டம் 2023, வரும் அக்டோபர் 1-ம் தேதி முதல் அமலுக்கு வரஉள்ளதாக தகவல்கள் வெளி வந்துள்ளது. இந்த சட்டத்திருத்தம் அமலுக்கு வரும்பட்சத்தில் அரசின் சேவைகளுக்கு ஒரே ஆவணமாக பிறப்பு சான்றிதழை பயன்படுத்திக் கொள்ள முடியும்.




அதன்படி, இனி ஆதார், கல்வி நிறுவனங்களின் அட்மிசன், டிரைவிங் லைசென்ஸ், வாக்காளர் அடையாள அட்டை, திருமண பதிவுமற்றும் அரசு வேலை நியமனங்கள் உள்ளிட்ட அனைத்து வகையான சேவைக ளுக்கும் பிறப்புச் சான்றிதழை ஒற்றை ஆவணமாக இனி பயன்படுத்திக் கொள்ள முடியும். பிறப்பு-இறப்பு சட்டத் திருத்தம் என்பது தேசிய மற்றும் மாநில புள்ளிவிவரங்களை ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டு நிறைவேற்றப் பட்டுள்ளது. இதன் மூலம், பொதுச் சேவைகளில் வெளிப்படைத் தன்மை ஏற்படுவதுடன் செயல்திறனையும் அதிகரிக்க முடியும். மேலும், டிஜிட்டல் பதிவு மூலம் சமூக நலன்களை வழங்குவதற்கும் இந்த சட்டத்திருத்தம் உதவும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சமீபத்தில் நடந்து முடிந்த நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு திருத்த சட்டம் 2023 மசோதா மக்களவை மற்றும் மாநிலங்களவையில் நிறைவேற்றப் பட்டது. கடந்த ஆகஸ்ட் 1-ல் மாநிலங்களவையில் குரல் வாக்கெடுப்பு மூலம் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக் கது. இந்த புதிய சட்டத்திருத்தத்தின் கீழ், பதிவு செய்யப்பட்ட பிறப்பு மற்றும் இறப்புகளின் தேசிய தரவுத் தளத்தை பராமரிக்க இந்திய பதிவாளர் ஜெனரலுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தலைமைப் பதிவாளர்கள் (மாநிலங்களால் நியமிக்கப்பட்டவர்கள்) மற்றும் பதிவாளர்கள் (உள்ளூர் பகுதிகளுக்கு மாநிலங்களால் நியமிக்கப்பட் டவர்கள்) பிறப்பு மற்றும் இறப்பு தரவுகளை தேசிய தரவுத்தளத்துடன் பகிர்வதற்கு பொறுப்பாவார்கள். ஒவ்வொரு மாநிலமும் இதேபோன்ற தரவுதளத்தை மாநில அளவில் பராமரிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

காலைமணி.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# நடப்பு நிதியாண்டில் அரசு மின்-சந்தையில் நிலக்கரி அமைச்சகம் முன்னணி வகிக்கிறது

புது தில்லி, செப்.16

நடப்பு நிதியாண்டில், 14 செப்டம்பர் 2023 நிலவரப்படி, ஜிஇஎம் மூலம் கொள்முதல் ரூ.23,798 கோடியை எட்டியுள்ளது. இந்த சாதனையின் மூலம், நிலக்கரி அமைச்சகம் ஏற்கனவே 2023-24 நிதியாண்டிற்கான அதன் வருடாந்திர இலக்கான ரூ.21,325 கோடியை 2வது காலாண்டிலேயே தாண்டியுள்ளது. 2022-2023 நிதியாண்டில், ஜிஇஎம் மூலம் பொருட்கள் மற்றும் சேவை களை கொள்முதல் செய்ய நிலக்கரி அமைச்சகத்திற்கு (அதன் மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் உள்பட) நிர்ணயிக்கப்பட்ட இலக்கு ரூ.4000 கோடியாகும். உண்மையான சாதனை இந்த இலக்கைத் தாண்டி, ரூ.4,278 கோடியை எட்டியுள்ளது, இது 107% சாதனை விகிதத்தைக் குறிக்கிறது. தொழில்நுட்ப சிக்கல்களைத் தீர்க்க ஜெம் குழு மற்றும் சிஐஎல் கொள்முதல் குழு இடையே நெருக்கமான தொடர்பு மூலம் இந்த முன்மாதிரியான சாதனை சாத்தியமாகியுள்ளது.

கோல் இந்தியா லிமிடெட் மற்றும் அதன் துணை நிறுவனங்கள் 14 செப்டம்பர் 2023 நிலவரப்படி ரூ.23,363 கோடியை பங்களிப்பதன் மூலம் ஜி.இ.எம் இல் கொள்முதலில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளன, இது 2023-24 நிதியாண்டிற்கான அதன் உண்மையான இலக்கை விட 17% அதிகமாகும். இந்த சாதனையின் மூலம், கோல் இந்தியா லிமிடெட் ஜிஇஎம் கொள்முதலில் நாட்டின் முன்னணி சி.பி.எஸ்.இ.யாக மாறியுள்ளது.

ஆகஸ்ட் 2016 இல் தொடங்கப்பட்ட ஜி.இ.எம் முந்தைய டெண்டர் செயல்முறையை நவீனமயமாக்குவதையும், டிஜிட்டல்மயமாக்கலை ஏற்றுக்கொள்வதன் மூலம் அரசாங்க கொள்முதலில் ஒருமைப்பாடு மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு தொடங்கப்பட்டது. நிறுவப்பட்டதிலிருந்து கடந்த ஏழு ஆண்டுகளாக, நிலக்கரி அமைச்சகம் (எம்ஓசி) இந்த டிஜிட்டல் மாற்றத்திற்கான முயற்சிக்கு அர்ப்பணிப்புடன் உள்ளது.

ஜி.இ.எம் மூலம் நிலக்கரி அமைச்சகத்தின் (எம்.ஓ.சி) கணிசமான கொள்முதல் சாதனைகள் வெளிப்படையான மற்றும் திறமையான கொள்முதல் செயல்முறைகளை எளிதாக்குவதில் தளத்தின் செயல்திறன் மற்றும் செயல்திறனை எடுத்துக்காட்டுகின்றன. நிலக்கரி அமைச்சகத்தின் பல்வேறு பொதுத்துறை நிறுவனங்கள் ஜி.இ.எம்-ஐ பரவலாக ஏற்றுக்கொண்டது, ஒட்டுமொத்த கொள்முதல் சூழலை எளிதாக்குவதற்கும் மேம்படுத்துவதற்கும் அதன் வெற்றியை மேலும் வலியுறுத்துகிறது.

# நாட்டின் ஏற்றுமதி ஆகஸ்ட் மாதத்தில் 6.86 சதம் சரிவு

புது தில்லி, செப்.16

நாட்டின் ஏற்றுமதி கடந்த மாதம் 6.86 சதம் சரிந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இது குறித்து மத்திய அரசு வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நாட்டின் ஏற்றுமதி 34.48 பில்லியன் டாலராக உள்ளது. இது கடந்த ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் 37.02 பில்லியன் டாலராக இருந்தது. ஒப்பீட்டளவில் இந்த ஆண்டு 6.86% ஏற்றுமதி சரிந்துள்ளது.

இதேபோல், இறக்குமதியும் குறைந்துள்ளது. கடந்த ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் இந்தியாவின் இறக்குமதி மதிப்பு 61.88 பில்லியன் டாலராக இருந்தது. இது கடந்த மாதத்தில் 58.64 பில்லியன் டாலராக சரிந்துள்ளது. ஏற்றுமதிக்கும் இறக்கு மதிக்கும் இடையேயான வர்த்தக பற்றாக்குறை 24.16 பில்லியன் டாலராக உள்ளது. பெட்ரோலியப் பொருட்களின் ஏற்றுமதி அளவு 6 சதம் உயர்ந்தாலும், கடந்த ஆண்டை விட விலை 27 சதம் குறைந்துள்ளது. மேலும், இந்த ஆண்டு இதுவரையிலான ஏற்றுமதியில் பாதி சரிவுக்கு பெட்ரோலியப் பொருட்களின் விலை குறைவே காரணம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# நாட்டின் சமையல் எண்ணெய் இறக்குமதி கடந்த ஆகஸ்ட் மாதத்தில் 33 சதம் உயர்வு



புது தில்லி, செப்.16

நாட்டின் தாவர எண்ணெய் இறக்குமதி, கடந்த ஆகஸ்ட் மாதத்தில் 33 சதம் அதிகரித்துள்ளதாக, எஸ்இஏ எனப்படும், இந்திய சமையல் எண்ணெய் சுத்திகரிப்பு மற்றும் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இதுகுறித்து சங்கம் மேலும் தெரிவித்திருப்பதாவது: நாட்டின் தாவர எண்ணெய் இறக்குமதி, கடந்த ஆகஸ்ட் மாதத்தில் 33 சதம் உயர்ந்து, 18.66 லட்சம் டன்னாக இருந்தது. இது, முந்தைய ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் 14.01 லட்சம் டன்னாக இருந்தது. குறைந்த வரி மற்றும் உள்நாட்டு விலை வீழ்ச்சியால் ஏற்பட்ட தேவை அதிகரிப்பே, இதற்கு காரணமாகும்.

கடந்த 2022-23 எண்ணெய் ஆண்டில் அதாவது நவம்பர் முதல் அக்டோபர் வரையிலான காலகட்டத்தின், முதல் பத்து மாதங்களில், நாட்டின் மொத்த தாவர எண்ணெய்இறக்குமதி 24 சதம் அதிகரித்து, 141.21 லட்சம்டன்னாக இருந்தது. இது முந்தைய ஆண்டில் 113.76 லட்சம் டன்னாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

நாட்டின் அதிகபட்ச இறக்குமதி என்பது கடந்த 2016 - 17ல் 151 லட்சம் டன்னாக இருந்தது. உள்நாட்டில் போதிய அளவு எண்ணெய் வகைகள் கிடைக்கின்ற போதிலும், தேவை அதிகரித்து உள்ளதையே ஆகஸ்ட் மாத தரவுகள் பிரதிபலிக்கின்றன. இவ்வாறு எஸ்இஏ தெரிவித்துள்ளது.



## பொறியியல் சேவைகள், வடிவமைப்பு, உள்ளிட்டவற்றில்

# 2030க்குள் 100 பில்லியன் டாலர் ஏற்றுமதி இலக்கை அடையும் நோக்கில் செயலாற்ற வேண்டும்: கோயல்

புது தில்லி, செப்.16



பொறியியல் சேவைகள், வடிவ மைப்பு, கட்டுமானம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (ஆர் & டி) ஆகியவற்றில் 2030ம் ஆண்டுக்குள் 100 பில்லியன் அமெரிக்க டாலர் ஏற்று மதி இலக்கை அடையும் வகையில் செயலாற்றுமாறு பொறியியல் சமூகத்தினரை மத்திய அமைச்சர் பியூஷ்கோயல் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது: இந்தியாவின் தலைமையின் கீழ் வெற்றிகரமாக ஜி 20 உச்சிமாநாடு நடத்தப்பட்டிருப்பதன் மூலம் நாட்டின் மதிப்பு உலக அளவில் உயர்ந்துள்ளது என்று அவர் தெரிவித்தார். இந்தியாவின் குரல் உலகளாவிய தென்பகுதி நாடுகளின் குரலாகவும் ஒட்டுமொத்த உலகின் குரலாகவும் மாறி வருகிறது என்று அவர் கூறினார். இதை 140 கோடி இந்தியர்களின் கூட்டு வெற்றியாக கொண்டாடுமாறு அனைத்து இந்தியர்களுக்கும் அமைச்சர் அழைப்பு விடுத்தார்.

இந்திய நிறுவனங்கள் உலகளவில் விரிவடைந்து, புதிய சந்தைகளைக் கைப்பற்ற வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். ஸ்டெம் எனப்படும் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் அல்லது கணிதப் பட்டதாரிகளின் திறன்களை சிறப்பாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். உலகளாவிய திட்டங்களில் இந்திய பொறியியல் நிறுவனங்களின் பங்கேற்பு தொடர்பான சர்வதேச நடைமுறைகள் குறித்து ஒரு ஆய்வை நடத்துமாறு சேவைகள் ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில் (எஸ்இபிசி) மற்றும் இந்திய பொறியாளர்கள் நிறுவனம் (ஐஇஐ) ஆகியவற்றுக்கு பியூஷ் கோயல் அழைப்பு விடுத்தார்.

பொறியாளர்கள் தினம் கொண்டாடப்படுவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த அமைச்சர், இது தனிநபர்கள் மற்றும் தேசம் அதிக உயரங்களை அடைவதற்கான உந்து சக்தியாக விளங்குகிறது என்று கூறினார். தற்சார்புடன் உலகளவில் செல்வாக்கு மிக்க நாடாக இந்தியா திகழவேண்டும் என்ற பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையின் அடிப்படையில் பொறியாளர்களின் உழைப்பு மற்றும் கண்டுபிடிப்புகள் முக்கியத்துவம் வாய்ந்தது என்று பியூஷ் கோயல் கூறினார்.

# முட்டை கொள்முதல் விலை சரிவால் பண்ணையாளர்களுக்கு ரூ.360 கோடி இழப்பு



நாமக்கல், செப்.16

உற்பத்தி செலவை விட குறைவாக, முட்டை கொள்முதல் விலை நிர்ணயம் செய்வதால், ஒன்றரை மாதத்தில், ரூ.360 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக, பண்ணையாளர்கள் தெரிவித்திருப்பதாக தகவல்கள் வெளிவந்துள்ளது. நாமக்கல் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோழிப்பண்ணைகள் உள்ளன. இங்கு வளர்க்கப்படும், 6 கோடி கோழிகள் மூலம், தினமும், 5 கோடி முட்டை உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த முட்டைகள், தமிழக அரசின் சத்துணவு திட்டத்திற்கும், பிற மாநிலங்களுக்கும், வெளிநாட்டிற்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு மே,1 முதல், ரொக்க விற்பனைக்கு, மைனஸ் இல்லாத முட்டை விலையை அறிவித்து வருகிறது. இதை அனைத்து பண்ணையாளர்களும் கடைப்பிடித்துவருகின்றனர். முட்டை கொள்முதல் விலை, தற்போது 470 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த விலை, உற்பத்தி செலவைவிட குறைவாக உள்ளதால், நஷ்டம் ஏற்படுவதாக பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து தமிழ்நாடு முட்டைக்கோழி பண்ணையாளர்கள் சம்மேளன துணைத்தலைவர் வாங்கிலி சுப்ரமணியம் தெரிவித்துள்ளதாவது: கோழித்தீவனம் விலை பலமடங்கு உயர்ந்துள்ளது. ஒரு முட்டை உற்பத்திக்கு, 500 காசு செலவாகிறது. அதற்கு மேல், விலை நிர்ணயம் செய்தால் மட்டுமே, பண்ணையாளர்களுக்கு லாபம் கிடைக்கும்.உற்பத்தி செலவை விட குறைவாக விற்பனை செய்வதால், கடந்த, மாதம் தினமும், 10 கோடி வீதம், 300 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. கடந்த, 15 நாட்களில், மேலும், 60 கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. மொத்தமாக, ஒன்றரை மாதத்தில், ரூ.360 கோடி பண்ணையாளர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. உத்தர பிரதேசம், பீஹார், அசாம் போன்ற வட மாநிலங்களுக்கு, தினமும், 50 லட்சம் முட்டைகள் அனுப்பி வைக்கப்பட்ட நிலையில், தற்போது, 15 முதல், 20 லட்சம் முட்டைகள் மட்டுமே அனுப்பப்படுகின்றன. தீபாவளிக்கு பின், அதிக அளவில் முட்டை அனுப்ப வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ஒப்போ ஏ2 ப்ரோ ஸ்மார்ட்போன் சீனாவில் அறிமுகம்

மும்பை, செப்.16

ஒப்போ நிறுவனம் வளைந்த டிஸ்பிளேவைக் கொண்ட ஒப்போ ஏ2 ப்ரோ ஸ்மாரட்போனை சீனாவில் அறிமுகம் செய்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இந்த புத்தம் புதிய ஸ்மார்ட்போன் ஆனது விரைவில் இந்தியா உட்பட பல்வேறு நாடுகளில் அறிமுகம் செய்யப்படும் எனத் தகவல் வெளிவந்துள்ளது. இதன் சிறப்பம்சங்களாவது:



அதாவது ஒப்போ ஏ2 ப்ரோ ஸ்மார்ட்போன் ஆனது 6.67-இன்ச் ஃபுல் எச்டி பிளஸ் அமோலெட் கர்வ்டு டிஸ்பிளே வசதியைக் கொண்டுள்ளது. பின்பு 120 ஹெர்ட்ஸ் ரெஃப்ரெஷ் ரேட்,950 நிட்ஸ் ப்ரைட்னஸ், 240 ஹெர்ட்ஸ் டச் சாம்ப்ளிங் ரேட் மற்றும் சிறந்த பாதுகாப்பு வசதியைக் கொண்டு இந்த போன் வெளிவந்துள்ளது.

டைமன்சிட்டி 7050 6என்எம் பிராசரஸ் கொண்டுள்ளது இந்த ஒப்போ ஏ2 ப்ரோ ஸ்மார்ட்போன். 64எம்பி பிரைமரி கேமரா + 2எம்பி டெப்த் கேமரா என்கிற டூயல் ரியர் கேமரா அமைப்பைக் கொண்டுள்ளது இந்த ஒப்போ ஏ2 ப்ரோ ஸ்மார்ட்போன். மேலும் எல்இடி பிளாஷ் மற்றும் பல்வேறு கேமரா அம்சங்கள் கொண்டு இந்த போன் வெளிவந்துள்ளது. எனவே இந்த ஸ்மார்ட்போன் உதவியுடன் அட்டகாசமான புகைப்படங்களை எடுக்க முடியும்.

இதுதவிர எல்இடி பிளாஷ் மற்றும் பல கேமரா அம்சங்களைக் கொண்டுள்ளது. பின்பு 8ஜிபி ரேம் + 256ஜிபி மெமரி மற்றும் 12ஜிபி ரேம் + 256ஜிபி மெமரி மற்றும் 12ஜிபி ரேம் + 512ஜிபி மெமரி என மூன்று வேரியண்ட்களில் இந்த அட்டகாசமான ஸ்மார்ட்போன் விற்பனைக்கு வரும். அதேபோல் 5000எம்ஏஎச் பேட்டரியைக் கொண்டுள்ளது. பின்பு இந்த பேட்டரியை சார்ஜ் செய்ய 67 வாட்ஸ் ஃபாஸ்ட் சார்ஜிங் வசதி உள்ளது. குறிப்பாக இந்த போன் நீண்ட நேரம் பேட்டரி பேக்கப் வழங்கும். பின்பு விரைவாக ஒப்போ ஏ2 ப்ரோ போனை சார்ஜ் செய்துவிட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

பிளாக், டெசர்ட் பிரவுன், டிவிலைட் நிறங்களில் ஒப்போ ஏ2 ப்ரோ ஸ்மார்ட்போன் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த போனின் ஆரம்ப விலை 1799 யுவான் (இந்திய மதிப்பில் ரூ.20,820). குறிப்பாக இந்த போனை விரைவில் இந்தியாவிலும் அறிமுகம் செய்யப்படும் என்பதால் அதிக எதிர்பார்ப்புகளை உருவாக்கியுள்ளது.

# ரெட்மி 43-இன்ச் 4கே டிவி இந்தியாவில் அறிமுகம்

புது தில்லி, செப்.16

ரெட்மி நிறுவனம் இந்தியாவில் 43-இன்ச் ரெட்மி ஸ்மார்ட் ஃபயர் டிவியை அறிமுகம் செய்துள்ளது. இந்த புத்தம் புதிய ஸ்மார்ட் டிவி ஆனது பட்ஜெட் விலையில் தனித்துவமான வடிவமைப்பு மற்றும் தரமான அம்சங்களுடன் வெளிவந்துள்ளது. இதன் சிறப்பம்சங்களாவது:




43-இன்ச் ரெட்மி ஸ்மார்ட் ஃபயர் டிவி ஆனது 4கே டிஸ்பிளே வசதியைக் கொண்டு வெளிவந்துள்ளது. பின்பு 3840 மு 2160 பிக்சல்ஸ், ஆட்டோ லோ லேட்டன்சி மோட், 6.5எம்எஸ் ரெஸ்பான்ஸ் டைம் உள்ளிட்ட பல சிறப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது.

குறிப்பாக குவாட்-கோர் கார்டெக்ஸ் ஏ55 பிராசஸர் வசதியைக் கொண்டுள்ளது இந்த அசத்தலான 43-இன்ச் ரெட்மி ஸ்மார்ட் ஃபயர் டிவி. மேலும் கேமிங் பிரியர்களை கவரும் நோக்கில் மாலி-ஜி52 எம்சி1 ஜிபியு கிராபிக்ஸ் கார்டு கொடுக்கப்பட்டிருக்கிறது.

அலெக்ஸா வாய்ஸ் ஆதரவு கொண்ட ஸ்மார்ட் ரிமோட் கொண்டுள்ளது. அமேசான் ப்ரைம் வீடியோ, நெட்ஃபிக்ஸ் மற்றும் அமேசான் ப்ரைம் மியூசிக் ஆகியவற்றுக்கான ார்ட்கட் பட்டன்களை கொண்டுள்ளது இந்த ஸ்மார்ட் டிவியின் ஸ்மார்ட் ரிமோட். டால்பி ஆடியோ, டிடிஎஸ்-எச்டி மற்றும் டிடிஎஸ்: விர்ச்சுவல் எக்ஸ் உள்ளிட்ட ஆடியோ அம்சங்களைக் கொண்ட 24 வாட்ஸ் ஸ்பீக்கர்களுடன் இந்த அதிநவீன ரெட்மி 4கே ஸ்மார்ட் டிவி வெளிவந்துள்ளது. வைஃபை 802.11 ஏசி, ஏர்ப்ளே 2, மிராகாஸ்ட், புளூடூத் 5.0, எச்டி எம்ஐ போர்ட், யுஎஸ்பி போர்ட், 3.5எம்எம் ஆடியோ ஜாக், ஈதர்நெட், ஆண்டெனா உள்ளிட் பல கனெக்டிவிட்டி ஆதரவுகளைக் கொண் டுள்ளது. குறிப்பாக 43-இன்ச் 4கே ஸ்மார்ட் டிவிகள் இந்தியாவில் ரூ.35,000-க்கு மேல் தான் விற்பனை செய்யப்படுகிறது.

ஆனால் இந்த 43-இன்ச் ரெட்மி ஸ்மார்ட் ஃபயர் டிவி ரூ.26,999-விலையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு 43-இன்ச் ரெட்மி ஸ்மார்ட் ஃபயர் டிவியை ரூ.24,999 விலையில் வாங்கலாம் என நிறுவனம் கூறியுள்ளது. இதன் விற்பனை தேதியை குறிப்பிடவில்லை ரெட்மி நிறுவனம். ஆனாலும் வரும் பண்டிகை காலங்களில் இந்த டிவி எம்ஐ.காம் மற்றும் அமேசான் தளத்தில் விற்பனைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ரூ.2,000 கோடி திரட்டியது பேங்க் ஆஃப் இந்தியா

மும்பை, செப்.16

கடன் பத்திர வெளியீடு மூலம் அரசுக்குச் சொந்தமான பேங்க் ஆஃப் இந்தியா ரூ.2,000 கோடி மூலதனம் திரட்டியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இது குறித்து பேங்க் ஆஃப் இந்தியா வங்கி வெளியிட்டுள்ள ஒழுங்காற்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: 7.88 சதவீத கூப்பன் விகிதத்தில் அடுக்கு-2 கடன் பத்திரங்ளை வெளியிட்டு ரூ.2,000 கோடி மூலதனம் திரட்டியுள்ளோம். தேசிய பங்குச் சந்தையின் மின்னணு ஏல தளத்தின் மூலம் இந்த தொகை திரட்டப்பட்டது. ரூ.2,000 கோடிக்கு கடன் பத்திரங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தாலும், ரூ.3,770 கோடி மதிப்பிலான கடன் பத்திரங்களைக் கோரி 83 விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. ஆர்பிஐயின் வழிகாட்டுதல்களின்படி வங்கியின் ஒட்டுமொத்த மூலதனத்தை அதிகரிக்கவும், நீண்டகால நிதி ஆதாரங்களை மேம்படுத்தவும் இந்தத் தொகை திரட்டப்பட்டுள்ளது. எந்தவொரு குறிப்பிட்ட திட்டத்திற்கும் நிதியளிக்க இந்த தொகை பயன்படுத்தப்படாது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ரூ.45,000 கோடிக்கு ராணுவ தளவாட கொள்முதல் மத்திய பாதுகாப்பு அமைச்சகம் ஒப்புதல் வழங்கியது

புது தில்லி, செப்.16

ராணுவத்துக்கு ரூ.45,000 கோடியிலான தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்கான 9 திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இதில், 12 சுகோய்-30 எம்கேஐ ரக போர் விமானங்கள், துருவாஸ்திர ஏவுகணைகள், டோர்னியர் விமானம் மேம்படுத்தல் ஆகிய திட்டங்களும் அடங்கும். மேக் இன் இந்தியா திட்டத்தின் அடிப்படையில் இந்த ஒப்புதல் அளிக் கப்பட்டுள்ளது. அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற பாதுகாப்பு கொள்முதல் கவுன்சில் கூட்டத்தில் ரூ.45,000 கோடியி லான 9 திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது என அந்த அமைச் சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தக் கூட்டத்தில் பேசிய அமைச்சர் ராஜ்நாத் சிங், ‘உள் நாட்டிலேயே தயாரிக்கப்படும் ராணுவ தளவாடங்களை மேம்படுத்த வேண்டியது அவசியம். 50 சத உள்நாட்டு உதிரி பொருள்கள் பயன்படுத்தப்படும் தளவாடங்களில் குறைந்தது 60 முதல் 65 சதமாக அதகரிக்க முயற்சிக்க வேண்டும் என்றார். பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், ‘இந்திய நிறுவனங்களிடம் இருந்து மட்டும் ரூ.45 ஆயிரம் கோடியிலான தளவாடங்களுக் குத் தேவையான பொருள்கள் வாங்கப்படும். இது பாதுகாப்புத்துறையில் தற்சார்பு இந்தியா திட்டத்தை ஊக்குவிக்கும். இலகுரக கவச பல் நோக்கு வாகனங்கள், ஒருங்கிணைந்த கண்காணிப்பு குறிவைத்து தாக்கும் தொழில்நுட்பம், துப்பாக்கிகள், ரேடார் கள் அடங்கிய உயர் பாதுகாப்பு வாகனங்கள், இந்திய கடற்படைக்கு அடுத்த தலைமுறை கப்பல்கள் வாங்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பிரிட்டன் அரசு—டாடா ஸ்டீல் இடையே ஒப்பந்தம்

புது தில்லி, செப்.16

பிரிட்டன் அரசு–டாடா ஸ்டீல் இடையே சுமார் ரூ.12,500 கோடி மதிப்பிலான கூட்டு முதலீட்டு ஒப்பந்தம் கையொப்பமாகியுள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளது. பிரிட்டனின் சௌத் வேல்ஸ் பகுதியிலுள்ள போர்ட் டால்போட் என்ற இடத்தில் டாடா ஸ்டீல் நிறுவனத்தின் இரும்பு உருக்காலை செயல்பட்டு வருகிறது. அதில் சுமார் 8,000 பேர் பணியாற்றி வருகின்றனர். உற்பத்தி சார்ந்த நிறுவனங்களில் இருந்து கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை பிரிட்டன் அரசு மேற்கொண்டு வருகிறது.

அதன் காரணமாக, ஆலையின் இயந்திரங்களைப் பெருமளவில் மாற்ற வேண்டிய கட்டாயம் டாடா ஸ்டீல் நிறுவனத்துக்கு ஏற்பட்டுள்ளது. அதற்கு அதிக நிதி தேவைப்படுவதால், அரசிடமிருந்து குறிப்பிட்ட நிதியுதவியைப் பெறுவதற்கு அந்நிறுவனம் திட்டமிட்டது.

அதன்படி, பிரிட்டன் அரசிடமிருந்து சுமார் ரூ.5,000 கோடி நிதியைப் பெறுவதற்கான பேச்சுவார்த்தையில் டாடா ஸ்டீல் நிறுவனம் ஈடுபட்டு வந்தது. இந்நிலையில், அந்த ஒப்பந்தம் தற்போது கையொப்பமானது. அதன்படி, டாடா ஸ்டீல் நிறுவனமானது சௌத் வேல்ஸ் இரும்பு உருக்காலையில் சுமார் ரூ.12,500 கோடியை முதலீடு செய்யவுள்ளது. அதில் சுமார் ரூ.5,000 கோடியை பிரிட்டன் அரசு அந்நிறுவனத்துக்கு வழங்கவுள்ளது. மீதமுள்ள தொகையை அந்நிறுவனமே முதலீடு செய்யும்.

இது தொடர்பாக, பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக் எக்ஸ் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், 'இந்த முதலீட்டு ஒப்பந்தமானது, பிரிட்டனின் இரும்பு உருக்காலைத் துறையை நவீனப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அதை எதிர்காலத்துக்கு உகந்ததாகவும் மாற்றும். மேலும், ஆயிரக்கணக்கான திறன்மிக்க பணியாளர்களையும் காப்பதோடு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் உதவும் என தெரிவித்துள்ளார். டாடா குழுமத் தலைவர் என்.சந்திரசேகரன் இந்த முதலீட்டு ஒப்பந்தம் தொடர்பாக தெரிவிக்கையில், இந்த ஒப்பந்தமானது பிரிட்டனின் எதிர்காலத்துக்கான முக்கிய திருப்புமுனையாக இருக்கும். பசுமை தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான வளர்ச்சிக்கு இந்த ஒப்பந்தம் வழிவகுக்கும் என்றார். இந்த முதலீடு மூலமாக ஆலையில் நவீன கருவிகள் நிறுவப்பட்டு, கரியமில வாயு வெளியேற்றம் பெருமளவில் குறைக்கப்படும் என டாடா ஸ்டீல் நிறுவனம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெரம்பூர் ஐசிஎப் தொழிற்சாலை ஆண்டுக்கு 3,000 ரயில் பெட்டிகளை தயார் செய்கிறது



சென்னை, செப்.16

படுக்கை வசதியுடன் கூடிய வந்தே பாரத் ரயில் செயல்பாட்டுக்கு வந்தால் சென்னையிலிருந்து தில்லிக்கு 20 மணிநேரத்துக்குள் செல்ல முடியும் என பெரம்பூர் ஒருங்கிணைந்த ரயில்பெட்டி தொழிற்சாலை (ஐசிஎப்) பொதுமேலாளர் பி.ஜி.மல்லையா தெரிவித்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது:

பெரம்பூர் ஐசிஎப் தொழிற்சாலை ஆண்டுக்கு 3,000 ரயில் பெட்டிகளை தயார் செய்து உலகில் முதல் இடத்தில் உள்ளது. இந்திய ரயில்வேக்கு மட்டுமின்றி 14 நாடுகளுக்கு ரயில் பெட்டிகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

ரயில் தொழில்நுட்பத்தில் அடுத்தக்கட்டமாக 87 சத உள்நாட்டு தயாரிப்பில் வந்தே பாரத் ரயில் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதுவரை 25 வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்பட்டு வரும் நிலையில் 10 வந்தே பாரத் ரயில்கள் செயல்பாட்டுக்கு கொண்டுவர தயார் நிலையில் உள்ளது. அதுமட்டுமில்லாமல் படுக்கை வசதியுடன் கூடிய வந்தே பாரத் ரயில், வந்தே புகர் ரயில், வந்தே சரக்கு ரயில் உள்ளிட்டவை செயல்பாட்டுக்கு கொண்டுவரப்படவுள்ளது. படுக்கை வசதியுடன் கூடிய வந்தே பாரத் ரயில் நிகழாண்டு இறுதிக்குள் செயல்பாட்டுக்கு வரும். சுமார் 1,000 கி.மீ தொலைவுக்கு அதிகமான இடங்களுக்கு இத்தகைய ரயில்கள் இயக்கப்படும். இதன் மூலம் சென்னையிலிருந்து தில்லிக்கு 20 மணி நேரத்துக்குள் செல்ல முடியும்.

மேலும், வந்தே பாரத் ரயிலில் எடையை குறைக்கும் வகையில் அலுமினியம் கொண்டு புதிய வந்தே பாரத் ரயில் தயாரிக்கப்படவுள்ளது. எளிய மக்களின் வந்தே பாரத்: எளிய மக்களுக்கும் வந்தே பாரத் ரயிலுக்கு இணையான வேகத்தில் செல்ல புஷ் புல் ரயில் அக்டோபர் 23ம் தேதி முதல் செயல்பாட்டுக்கு கொண்டுவரப்படவுள்ளது. முற்றிலும் எல்எச்பி பெட்டிகள் கொண்ட இந்த ரயிலின் இரு புறமும் மின்சார இன்ஜின் கொண்டு இயக்குவதன் மூலம் வந்தே பாரத் ரயிலுக்கு இணையாக சுமார் 130 கி.மீ வேகத்தில் இயக்க முடியும் என்றார் அவர்.

# இந்தியாவில் அறிமுகமானது 2023 ஹோண்டா சிபி200எக்ஸ்

மும்பை, செப்.16

ஹோண்டா மோட்டார்சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் இந்தியா நிறுவனம் 2023 சிபி200எக்ஸ் மோட்டார்சைக்கிளை இந்திய சந்தையில் அறிமுகம் செய்துள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளது.



புதிய மாடல் தற்போது ஓபிடி-2 விதிகளுக்கு ஏற்ப அப்டேட் செய்யப்பட்டு உள்ளது. அதன்படி 2023 ஹோண்டா சிபி200எக்ஸ் மாடலின் தோற்றம் மற்றும் டிசைன் 2022 மாடலை போன்றே காட்சியளிக்கிறது. அதன்படி இந்த மாடல் மஸ்குலர் தோற்றம், சிங்கில்-பீஸ் ஹெட்லைட், பிகினி ஃபேரிங், ஸ்மோக்டு வைசர், ஸ்ப்லிட் சீட் செட்டப், 2-பீஸ் கிராப் ரெயில், நியூட்ரல் ரைடர் டிரை-ஆங்கில் உள்ளிட்டவை வழங்கப்பட்டு இருக்கிறது.

டிசைன் மாற்றங்கள் செய்யப்படவில்லை என்ற போதிலும், 2023 ஹோண்டா சிபி200எக்ஸ் மாடல் புதிதாக டிசெண்ட் புளூ மெட்டாலிக் மற்றும் பியல் நைட்ஸ்டார் பிளாக் மற்றும் ஸ்போர்ட்ஸ் ரெட் நிறங்களில் கிடைக்கிறது.

இந்த மாடலில் ஓபிடி-2 விதிகளுக்கு பொருந்தும், 184.4சிசி சிங்கில் சிலிண்டர் என்ஜின் வழங்கப்பட்டு உள்ளது. இந்த என்ஜின் 17 ஹெச்.பி. பவர், 15.9 நியூட்டன் மீட்டர் டார்க் இழுவிசையை வெளிப்படுத்தும் திறன் கொண்டிருக்கிறது. இத்துடன் எல்.இ.டி. இலுமினேசன், முழுமையான டிஜிட்டல் இன்ஸ்ட்ரூமெண்ட் கன்சோல், அட்ஜஸ்ட் செய்யக்கூடிய பிரைட்னஸ் வழங்கப்பட்டு உள்ளது.

இதில் ஸ்பீடோமீட்டர், ட்ரிப் மீட்டர், ஓடோமீட்டர், ஃபியூவல் லெவல், நேரம் மற்றும் பல்வேறு விவரங்கள் காண்பிக்கப்படுகிறது. புதிய மாடலில் ஹோண்டா நிறுவனம் யு.எஸ்.டி. முன்புற ஃபோர்க்குகளையும், மோனோஷாக் யூனிட்டையும் வழங்கி இருக்கிறது. இதன் இருபுறமும் டிஸ்க் பிரேக்குகள், ஏ.பி.எஸ். வழங்கப்பட்டு உள்ளது. இந்திய சந்தையில் இதன் விலை விலை ரூ.1 லட்சத்து 46 ஆயிரத்து 999. எக்ஸ்-ஷோரூம் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

# மதுரை மாவட்டம் கோமதிபுரம் ஆவின் நகர் வழியாக சாலை அமைப்பதற்கான சாத்திகூறுகள் குறித்து அமைச்சர் ஆய்வு



மதுரை, செப்.16

மதுரை கோமதிபுரம் ஆவின் நகர் வழியாக சாலை அமைப்பதற்கான சாத்திகூறுகள் குறித்து வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, அமைச்சர், தெரிவித்ததாவது: மதுரை கோமதிபுரம் பகுதியில் சாலை குறுகலாக இருப்பதினால் பொதுமக்கள் செல்வதற்கும், வாகனங்கள் செல்வதற்கும் மிகவும் சிரமமாக இருப்பதால் மேலமடை கருப்பாயூரணி சாலையிலிருந்து கோமதிபுரம் வழியாக வண்டியூர் சுற்றுச்சாலை வரையில் புதிய சாலை அமைத்திட வேண்டுமென பொதுமக்கள் நீண்டநாட்களாக கோரிக்கை வைத்து வருகின்றனர்.

பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளது. அதன்படி, சாலை அமைப்பது தொடர்பாக ஆய்வு மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆய்வின் அடிப்படையில் சாலைஅமைப்பதற்கான பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

மேலும், இப்பகுதியில் தனியார் அரிசி ஆலைகள், தனியார் சுத்திகரிப்பு நீர்நிலையங்கள் செயல்படுவதாகவும், இதனால் லாரிகள் உள்ளிட்ட கனரக வாகன போக்குவரத்து அதிகமாக இருப்பதால் சாலை விரைவாக சேதமடைவதாக பொதுமக்கள் கருத்து தெரிவித்தனர்.

இது தொடர்பாகவும் ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் மற்றும் மாநகராட்சி ஆணையாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்தார். இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சியர் மா.சௌ. சங்கீதா, மதுரை மாநகராட்சி ஆணையாளர் கே.ஜே.பிரவீன் குமார், மாவட்ட வருவாய் அலுவலர் ர.சக்திவேல், மண்டல தலைவர் வாசுகி சசிகுமார் உட்பட வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

# உத்தரப்பிரதேச மாநிலத்தில் ஆலை அசோக் லேலண்ட் நிறுவனம் அமைக்கிறது

சென்னை, செப்.16

சென்னையில் தலைமையகத்தைக் கொண்டு செயல்பட்டு வரும் இந்தியாவின் முன்னணி வர்த்தக வாகன நிறுவனங்களில் ஒன்றான அசோக் லேலண்ட், உத்தர பிரதேசத்தில் உற்பத்தி ஆலையை அமைக்க முடிவு செய்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இது குறித்து அசோக் லேலண்ட் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: உத்தரப் பிரதே சத்தில் முதல்முறையாக உற்பத்தி ஆலை அமைக்க நிறுவனம் முடிவு செய்துள்ளது. இதற்காக, மாநில அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிறுவனத்தின் கரியமில சம நிலை இலக்கை அடையும் வகையில், மாற்று எரிபொருள் பயன் பாட்டை கருத்திக் கொண்டு இந்த புதிய ஆலை அமைக்கப்படும். அந்த ஆலையை அமைப்பதற்காக ரூ.1,000 கோடி முதலீடு செய்ய நிறுவனம் திட்டமிட்டுள்ளது. அந்தப் புதிய ஆலை செயல்படத் தொடங்கினால், அது இந்தியாவில் நிறுவனத்தின் 7வது வாகன உற்பத்தி ஆலையாக இருக்கும் என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# 277 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை அமைச்சர் வழங்கினார்

நாமக்கல், செப்.16

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் நகராட்சி அண்ணா சாலை அரசினர் மேல்நிலைப்பள்ளியில் 277 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் தெரிவித்ததாவது:

நாமக்கல் மாவட்டத்தில் இதுவரை 103 பள்ளிகளைச் சேர்ந்த 9 ஆயிரத்து 551 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது ராசிபுரம் அண்ணா சாலை அரசினர் மேல்நிலைப் பள்ளியில் பயின்ற மாணவன் 7.5 சத இட ஒதுக்கீட்டில் அண்ணா பல்கலைக்கழகத்தில் பொறியியல் கல்வி பயில உள்ளார். அதேபோன்று ஒரு மாணவன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் பயிலவும் தேர்வாகி யுள்ளார். இதுபோன்ற பல்வேறு திட்டங்களை நல்லமுறையில் பயன்படுத்தி, நன்றாக கல்வி பயின்று சமூகத்தில் நல்ல நிலையை அடைந்திட வேண்டும் என அமைச்சர் மா.மதிவேந்தன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இராசிபுரம் நகர்மன்றத் தலைவர் கவிதா சங்கர், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர்கள் என்.ஆர்.சங்கர், நடராஜ், வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் ஆர்.எம்.துரைசாமி, உள்ளாட்சி பிரதிநிதிகள், ஆசிரியர் பெருமக்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



# புதிய பென்ஸ் எலெக்ட்ரிக் கார் இந்திய சந்தையில் அறிமுகம்



சென்னை, செப்.16

மெர்சிடிஸ் பென்ஸ் நிறுவனத்தின் முற்றிலும் புதிய இக்யூஇ எலெக்ட்ரிக் எஸ்.யு.வி. மாடல் இந்திய சந்தையில் அறிமுகம் செய்யப்பட்டது. புதிய காரின் விலை ரூ. 1 கோடியே 39 லட்சம், எக்ஸ்-ஷோரூம் என்று நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. இந்த கார் ஒற்றை வேரியண்டில் கிடைக்கிறது. இந்திய சந்தையின் எலெக்ட்ரிக் வாகன பிரிவில் களமிறங்கிய நிலையில், இந்தியாவில் மெர்சிடிஸ் பென்ஸ் நிறுவனத்தின் 4வது எலெக்ட்ரிக் கார் மாடலாக புதிய இக்யூஇ அறிமுகமாகி இருக்கிறது. 2020 ஆண்டு முதலே மெர்சிடிஸ் பென்ஸ் நிறுவனம் இந்தியாவில் எலெக்ட்ரிக் கார் மாடல்களை விற்பனை செய்து வருகிறது.

புதிய மாடல் மெர்சிடிஸ் ஜிஎல்இ எஸ்.யு.வி.-இன் எலெக்ட்ரிக் வெர்சன் ஆகும். இந்த மாடல் இக்யூபி மற்றும் இக்யூஎஸ் மாடல்களின் இடையில் நிலைநிறுத்தப்படுகிறது. தோற்றத்தில் இந்த மாடல் இக்யூஎஸ் போன்றே காட்சியளிக்கிறது. இதன் வெளிப்புறம் மூடப்பட்ட நிலையில் முன்புற கிரில், எல்.இ.டி. டி.ஆர்.எல்.-கள், டிஜிட்டல் எல்.இ.டி. ஹெட்லேம்ப்கள், ஃபிளஷ் டோர் ஹேண்டில்கள், 20 இன்ச் அளவில் ஏரோ அலாய் வீல்கள் வழங்கப்படுகின்றன. இந்த எஸ்.யு.வி. மாடலின் உள்புறம் டூயல் ஸ்கிரீன்கள்- இன்ஸ்ட்ரூமெண்ட் கிளஸ்டர் மற்றும் இன்ஃபோடெயின்மெண்ட் மற்றும் எம்பியுஎக்ஸ் சிஸ்டம் வழங்கப்பட்டு இருக்கிறது. மற்ற அம்சங்களை பொருத்தவரை வயர்லெஸ் சார்ஜர், மல்டி-ஜோன் கிளைமேட் கண்ட்ரோல், பானரோமிக் சன்ரூஃப் வழங்கப்பட்டு இருக்கிறது. இந்திய சந்தையில் மெர்சிடிஸ் பென்ஸ் சிஞுசி மாடல் முழுமையாக ஷோட்-செய்யப்பட்ட ஒற்றை வேரியண்டில் கிடைக்கிறது.

இது இக்யூஇ 500 பிளஸ் 4 மேடிக் என்று அழைக்கப்படுகிறது. இந்த கார் முழு சார்ஜ் செய்தால் 550 கிலோமீட்டர்கள் வரையிலான ரேன்ஜ் வழங்குகிறது. இந்த எலெக்ட்ரிக் காரில் 90.5 கிலோவாட் ஹவர் பேட்டரி வழங்கப்பட்டு இருக்கிறது. இத்துடன் வழங்கப்பட்டு இருக்கும் எலெக்ட்ரிக் மோட்டார் 408 ஹெச்.பி. பவர், 858 நியூட்டன் மீட்டர் டார்க் இழுவிசையை வெளிப்படுத்தும் திறன் கொண்டிருக்கிறது.

# சர்வதேச பொருளாதாரம் சரிந்தாலும் இந்தியா வளர்ச்சி காணும்: டபிள்யுஇஎஃப்

புது தில்லி, செப்.16

அடுத்த சில ஆண்டுகளுக்கு உலகின் பெரும்பாலான நாடுகளின் பொருளாதாரம் சரிவைச் சந்திக்கும் என்றும், இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சி காணும் என்றும் நிபுணர்கள் நம்புவதாக உலகப் பொருளாதார கூட்டமைப்பின் (டபிள்யுஇஎஃப்) ஆய்வு தெரிவிக்கிறது.

இது குறித்து அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அடுத்த சில ஆண்டுகளுக்கு சர்வதேச பொருளாதாரம் சரிவைச் சந்திக்கும் என 60 சத தலைமை பொருளாதார நிபுணர்கள் எதிர்பார்க்கின்றனர். உலகின் பெரும்பாலான நாடுகளின் பொருளாதார வளர்ச்சி சரிவையே எதிர்கொள்ளும். அதே நேரத்தில், தெற்காசிய நாடுகள் முக்கியமாக இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி நேர்மறையாக இருக்கும் என 90 சதவீத நிபுணர்கள் கணிக்கின்றனர். இந்தியப் பொருளாதாரம் நடுத்தர அளவிலோ அல்லது வலுவான வளர்ச்சியையோ காணும்.

சர்வதேச அளவில் அதிகரித்துக் காணப்பட்ட பணவீக்கம் விரைவில் குறையும் என 86 சதவீத நிபுணர்கள் எதிர்பார்க்கின்றனர். அதே வேளையில், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள் ளப்பட்ட நடவடிக்கைகள் பொருளாதாரத்தில் நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் அவர்கள் கணித்துள்ளனர். முக்கியமாக, தொழில் நிறுவனங்களுக்கான கடன் வழங்கலில் பாதிப்பு, கடனைத் திரும்பச் செலுத்தாத தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, பங்குச் சந்தைகளில் பாதிப்பு உள்ளிட்டவை ஏற்பட வாய்ப்புள்ளது.

வளர்ந்து வரும் நாடுகள் அதிக பாதிப்புகளை எதிர்கொள்ளும். உணவுப் பாதுகாப்பு, பருவநிலை மாற்றம் உள்ளிட்ட பிரச்னைகளை அந்நாடுகள் எதிர்கொள்ளலாம். சர்வதேச சூழல் இவ்வாறே தொடர்ந்து நீடித்தால், 2030-ஆம் ஆண்டில் உலகின் பாதிக்கும் அதிகமான மக்கள் ஏழ்மை நிலையிலேயே இருப்பர். தனியார் முதலீடுகள் அதிகரிக்கும்பட்சத்தில் சர்வதேச அளவில் எண்ம கட்டமைப்புகள் மேம்பாடு, பசுமை எரிசக்தி உற்பத்தி உள்ளிட்ட துறைகள் வளர்ச்சி காணும் என ஆய்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# எண்ணூர் முகத்துவாரம் தூர்வாரும் பணிகள் குறித்த காலத்தில் முடிக்கப்படும்: துறைமுக இயக்குநர்

சென்னை, செப்.16

எண்ணூர் முகத்துவாரம் தூர்வாரும் பணிகள் திட்டமிட்டபடி குறித்த காலத்துக்குள் செய்து முடிக்கப்படும் என காமராஜர் துறைமுக மேலாண்மை இயக்குநர் ஜே.பி. ஐரீன் சிந்தியா தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.



இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது: எண்ணூர் முகத்து வாரத்தை தூர் வாரும் பணி தமிழக பொதுப்பணித் துறை மூலம் காமராஜர் துறைமுகத்தின் ரூ.156 கோடி மதிப்பீட்டில் நடை பெற்று வருகிறது. இதில் முகத்துவாரம் அகழ்வுப் படுத்துதல், உள்பகுதியில் ஆழப்படுத்துதல், மணல்மேடுகள் உருவாகாமல் தடுப்புச் சுவா அமைத்தல் உள்ளிட்ட அனைத்து பணிகளும் குறித்த காலத்துக்குள் செய்து முடிக்கப்படும் என்றார்.

இத்துறைமுகத்தில் பெரிய கப்பல்கள் வந்து செல்வதற்கு வசதியாக 15 முதல் 16 மீட்டர் ஆழப்படுத்திடும் திட்டம் விரைவில் தொடங்கப்பட உள்ளது. துறைமுகத்தின் கட்டமைப்பு வசதிகளை பெருக்குவதற்காக தொடங்கப்பட்ட வடக்கு இணைப்பு சாலை திட்டத்தின் இரண்டு கட்ட பணிகளுக்கு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது, தமிழக அரசு சார்பில் ரூ.2,500 கோடி மதிப்பீட்டில் வெளிவட்டச் சாலை அமைக்கும் திட்டத்தின் கீழ் இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ரயில்கள் மூலம் சரக்குகளை எடுத்துச் செல்வதற்காக கூடுதல் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. காமராஜர் துறைமுகத்தின் பல்வேறு பணிகளில் இப்பகுதியைச் சார்ந்த மகளிர் சுய உதவி குழுக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. நாட்டின் பன்னாட்டு ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம், கடலோர நீர்வழி உள்நாட்டுப் போக்குவரத்து துறை ஆகியவற்றில் தொடர்ந்து வளர்ச்சி ஏற்பட்டு வருகிறது. இதற்கேற்ப துறைமுகங்களின் தேவையும் அதிகரித்தே வருவதால் தனியார் துறைமுகங்களின் வருகை என்பது பெருந்துறைமுகங்களின் வளர்ச்சியில் தடையாக இருக்காது என்றார் அவர்.

# ரூ.400 கோடி மதிப்பில் டிக்ஸான் புதிய தொழிற்சாலை துவங்க திட்டம்?

புது தில்லி, செப்.16

சியோமி நிறுவனத்தின் ஒப்பந்த தயாரிப்பாளரான டிக்ஸான் டெக்னாலஜிஸ் நிறுவனம் புதுதில்லியில் ரூ.400 கோடி மதிப்பில், ஸ்மார்ட்போன் ஆலை ஒன்றை துவங்க உள்ளதாக, தகவல்கள் வெளியாகியுள்ளன.இது குறித்து விரிவான செய்தியாவது: சீனா நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகளை இந்தியாவில் மேற்கொள்ள வேண்டும் என்று இந்திய அரசு அண்மையில் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.இதையடுத்து சீன ஸ்மார்ட்போன் நிறுவன மான ஙவ்மி, டிக்ஸான் டெக்னாலஜிஸ் கூட்டுடன் இந்தியாவில் ஸ்மார்ட்போன்களை தயாரிக்க உள்ளது. டிக்ஸான், ஏற்கனவே இந்தியாவில் சாம்சங் மோட்டோரோலா உள்ளிட்ட நிறுவனங்களுக்கான ஸ்மார்ட்போன் உள்ளிட்ட மின்னணு சாதனங்களை தயாரித்து வழங்கி வருகிறது. இதையடுத்து, டிக்ஸான் 3 லட்சம் சதுரடியில் மிகப் பெரிய தொழிற்சாலையை புதுடில்லியில் துவங்க உள்ளதாக நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மேலும், இந்த ஆலையில், மூன்று ஆண்டுகளுக்கு, ரூ.400 கோடிக்கு மேல் டிக்ஸான் முதலீடு செய்ய உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.




# உலகின் 750 சிறந்த நிறுவனங்களின் பட்டியலை டைம் இதழ் வெளியிட்டது

நியூயார்க், செப்.16

டைம் இதழ் உலகின் 750 சிறந்த நிறுவனங்களின் பட்டியலை வருவாய் வளர்ச்சி, நிலைத்தன்மை மற்றும் பணியாளர் திருப்தி ஆகியவற்றின் அடிப்படையில் வெளியிட்டுள்ளது. சுமார் 750 நிறுவனங்கள் அடங்கிய பட்டியலில் வெறும் 8 இந்திய நிறுவனங்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளது.இந்த மாபெரும் பட்டியலில் முதல் 100 இடங்களுக்குள் இடம்பெற்ற நிறுவனங்களில் இன்போசிஸ் மட்டும் 64வது இடத்தில் உள்ளது.

டைம் இதழின் 750 நிறுவனங்கள் பட்டியலில் முதல் நான்கு இடங்களை அமெரிக்காவின் பிக் டெக் என அழைக்கப்படும் மைக்ரோசாப்ட், ஆப்பிள், ஆல்பாபெட் மற்றும் மெட்டா ஆகியவை கைப் பற்றியுள்ளது. உலகில் சிறந்து விளங்கும் நிறுவனங்களை அடை யாளம் காண டைம் பத்திரிக்கை பணியாளர் திருப்தி, வருவாய் வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றை 3 முக்கிய காரணி களாக வைத்து ஆய்வு செய்து இந்த பட்டியலை தயாரித்துள்ளது. டைம் பத்திரிக்கை 2022 ஆம் ஆண்டில் 100 மில்லியன் டாலர் அளவிலான வருவாய் ஈட்டிய ஒரு நிறுவனத்தை தான் இந்த ஆய்வில் சேர்க்கும், இதேபோல் 2020 முதல் 2022 வரையில் வளர்ச்சி பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களை மட்டும் தான் ஆய்வில் சேர்கிறது.

இதன் மூலம் முதல் இடத்தை மைக்ரோசாப்ட் பெற்ற பட்டியலில் இன்போசிஸ் 64 இடத்தையும், ஐடிசி 672வது இடத்தையும், டபிள் யுஎன்எஸ் குளோபல் சர்வீசஸ் 596வது இடத்தையும், எச்டிஎப்சி வங்கி 418வது இடத்தையும், ஹெச்சிஎல் டெக்னாலஜிஸ் 262வது இடத்தையும், ரிலையன்ஸ் 248வது இடத்தையும், மஹிந்திரா 210வது இடத்தையும், விப்ரோ 174வது இடத்தையும் பிடித்துள்ளது.

